# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 250/2023 |
| Police Station | Manamadurai PS |
| Deposition of Witness for | LW.3 /PW.3 |
| Name | அழகுகண்ணன் |
| Father's/Husband's Name | பாலகிருஸ்ணன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Absent. 317 crpc petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 30.04.2025 at **11**.00 a.m

**முதல் விசாரணை:**

நான் மதுரையில் வசிக்கிறேன். எதிரி செல்லக்கண்ணனை எனக்கு தெரியும். நான் மதுரையில் மொபைல் கடை வைத்துள்ளேன். அ.சா.2 எனது அம்மா. அ.சா.1 எனது அப்பா. கடந்த 23.11.2022 அன்று எனது தந்தை இருசக்கர வாகனத்தில் வேலாநேரி சென்று விட்டு மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் கோவில் அருகில் அருவாள் அடிப்பதற்காக சென்றுள்ளார். அன்று அம்மாவாசை என்பதால் அருவாள் அடிக்கமுடியவில்லை என்பதால் எனது தந்தை மதுரைக்கி கிளம்பி வந்த போது எனது தந்தை இருசக்கர வாகனத்தில் அண்ணாசிலை இரயில்வே கேட் அருகில் வேகத்தடையை தாண்டிய பின்னர் எதிரி செல்லகண்ணன் எனது தந்தையை பின்னால் இருந்து மிதித்து தள்ளியுள்ளார். எனது தந்தை கீழே விழுந்ததில் இடது பக்கம் தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. எனது தந்தையின் இடது கால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது தந்தைக்கு விபத்து ஏற்பட்டதாக யாரோ ஒரு நபர் எனது அம்மாவிடம்

தகவல் கூறினார். நானும் எனது அம்மாவும் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்று எனது தந்தையை பார்த்தோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மதுரை அரசு மருத்துவமனையில் காலை எடுக்கவேண்டும் என்று கூறியதால் அங்கிருந்து எனது தந்தையை தேவதாஸ் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது தகப்பனாருக்கு இடது பக்க தலையில் இரத்தக்காயமும் இடது கால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்தது. எனது தந்தை தேவதாஸ் மருத்துவமனையில் சுமார் 1 மாதம் சிகிச்சையில் இருந்தார். இந்த சம்பவத்தை பற்றி எனது தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

**மானாமதுரை**